# பொதுக்காலம் 5ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே! பொதுக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருப்பலிக்கு வருகை தந்திருக்கும் ஒவ்வொருவரையும் உள்ளன்போடு வாழ்த்தி வரவேற்கின்றோம். இன்றைய வாசகங்கள் இறைவனின் அழைப்பை நமக்கு வெளிப்படுத்துகின்றன. நாம் எந்நிலையில் இருந்தாலும் இறைவன் அதே நிலையில் நம்மை ஏற்றுக்கொண்டு, நம்மை அவரது கருவியாக பயன்படுத்துகின்றார். அவரது அழைப்பினை நாம் ஏற்ற காலத்தில் உணர்ந்து கொண்டு அவருக்கு நம்மை முழுமையாகக் கையளித்து அர்ப்பணித்து வாழும்போது நாம் அவரது உடனிருப்பை உணர்கின்றோம்.

இன்றைய வாசகங்களில் அழைக்கப்பட்ட மூவருமே சாதாரணமானவர்கள். இவர்கள் தங்களின் இயலாமையை உணர்ந்து, இயலாமையில் இறை ஆற்றலைக் கண்டறிந்தார்கள். எரியும் முட்புதரில் மோசேயை அழைத்த இறைவன் அவருக்கு வியத்தகு ஆற்றலை அளிக்கின்றார். அறியாப் பிள்ளையான சாமுவேலை அழைத்த இறைவன், ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனான தாவீதை அழைத்த இறைவன் இன்று நம்மையும் அழைக்கின்றார். யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்? என்று இறைவன் வினவிய போது, "இதோ! நான் இருக்கிறேன்; அடியேனை அனுப்பும்" என்று பதிலளித்த இறைவாக்கினர் எசாயாவின் மனநிலை நம்மிடம் உள்ளதா?

கட்டுவோர் புறக்கணித்த கல்லேக் கட்டடத்தின் மூலைக்கல் ஆயிற்று என்ற இறைவார்த்தைக்கேற்ப மனிதர்களாலும் ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டவர்களையே இறைவன் தேர்ந்தெடுத்து அழைத்து, அவர்களின்மீது தமது வல்லமையைப் பொழிந்து, தமது பணிக்காகப் பயன்படுத்துகின்றார்.

பவுலடியார் தான் இயேசுவால் அழைக்கப்பட்டதை உணர்ந்து, தனது திருத்தூதர் நிலைக்குக் கடவுளே காரணம் என்றும் அதே வேளையில் திருத்தூதர்களிலே தான் கடையவன் என்றும் தன்னையேத் தாழ்த்திக் கொள்கிறார். இவ்வாறு நாம் நம்மையேத் தாழ்த்திக் கடவுளை முன்னிறுத்தி வாழும் போது இறை வல்லமை நம்மை முழுமையாய் ஆட்கொள்ளும். இறைவனின் உடனிருப்பு என்னும் நம்முள் நிலைத்திருக்கும். இவ்வரம் வேண்டி இப்பலியினில் பக்தியாய் பங்கேற்போம்.

### முதல் வாசக முன்னுரை

இன்றைய முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினரை இறைவன் அழைத்த போது அவர் தனது நிலையை ஏற்றுக்கொண்டு, தூய்மையற்ற உதடுகளைக் கொண்டவன் நான் என்று சொன்ன போது அவரது உதடுகளை இறைவன் நெருப்பினால் தூய்மைப்படுத்தி, 'நான் இருக்கிறேன்' என்று தேற்றிய நிகழ்வினை வாசிக்கக் கேட்டு நம் ஆழ்மனதில் பதிய வைப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவர்களை அடியோடு அழிக்க வேண்டும் என்ற வெறி கொண்ட சவுலை இறைவன் தடுத்தாட் கொண்டு அழைத்து, இறைவாக்கு உரைக்கத் தேவையான ஆற்றலையும், துணிவையும் பெற்றது இறைவல்லமையாலே என்று

தம்மையே தாழ்த்திக் கூறும் பவுலடியாரின் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து மனதில் இருத்துவோம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பின் இறைவா! திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தமது அழைத்தலின் மேன்மையை உணர்ந்து, தங்களது வாழ்வின் மூலம் இறைவார்த்தையை அறிவிப்பவர்களாக வாழ்ந்து காட்டிட வேண்டிய வரங்களை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அனைத்துலகின் அரசரே எம் இறைவா! நாட்டை ஆளும் தலைவர்கள் தங்களுக்கென்று வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளின் தன்மையை உணர்ந்து ஊழல், லஞ்சம், ஏற்றத்தாழ்வுகளை மறுத்து மக்களுக்குத் தேவையான நலத்திட்டங்களை வழங்கி, மக்களின் வாழ்வாதாரம் உயர வழிவகுக்கும் நல் உள்ளம் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அப்பா! தந்தையே! என்றழைக்கும் உரிமையை எமக்களித்த இறைவா! உம் பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் எசாயா இறைவாக்கினர், ‘இதோ! நான் இருக்கிறேன், அடியேனை அனுப்பும்’ என்று உம் குரலுக்குச் செவிசாய்த்தது போல எங்களைத் தாழ்த்தி உமது வார்த்தையின் வழியில் வாழ்ந்து, பிறரின் மகிழ்வில் உம்மை கண்டு கொள்ளும் நல் உள்ளம் தந்திடவும் வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. நன்மைகளின் நாயகனே எம் இறைவா! உலக மக்கள் அனைவரும் பாதுகாக்கப்படவும், பரவி வரும் தொற்று நோய் விரைவில் நீங்கி மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பவும், தேவையில் இருப்போருக்குப் பகிர்ந்தளிக்கும் மனதை எல்லோரும் பெற்றிடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : ஆசிரியை திருமதி. ஞா. சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com